**நியு சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு**

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.



# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2024

## ஆரம்பப் பிரிவு (ஆண்டு 3 & 4)

## Basic Level (Year 3 & 4)

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

Time Given : 60 Minutes

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :
ஆசிரியர், மாணவர்களுக்கு முதல் 10நிமிடங்களுக்கு
வினாக்களையும் விடைகளையும் வாசித்துக் காட்டவேண்டும்

Aug 2024

**For questions 1-3 choose the word that best describes what's shown in the picture.**

**1 முதல் 3 வரையுள்ள வினாக்களுக்கு, படங்களில் காட்டப்பட்டிருப்பதைச் சரியாகக் குறிக்கும் வார்த்தையைத் தெரிவு செய்க.**

1. கூடையில் ____________ இருக்கின்றன.



(அ) காய்கறிகள்
(ஆ) பழங்கள்
(இ) பூக்கள்
(ஈ) புத்தகங்கள்

2. பனியில் ____________ வண்டியை இழுக்கின்றன.



(அ) புலிகள்
(ஆ) பூனைகள்
(இ) பறவைகள்
(ஈ) நாய்கள்

3. அம்மா கடையில் ____________ வாங்கினார்.



(அ) முட்டைகள்
(ஆ) தொப்பிகள்
(இ) பட்டங்கள்
(ஈ) காய்கறிகள்

**Choose the correct answer for questions 4 - 5.**

**4 முதல் 5 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவசெய்க.**

4. காகம் ____________ என்று கரைந்தது.



(அ) கா கா
(ஆ) கூ கூ
(இ) கீ கீ
(ஈ) வள் வள்

5. மிளகாய் ____________ .



(அ) இனிக்கும்
(ஆ) உறைக்கும்
(இ) கசக்கும்
(ஈ) புளிக்கும்

**For Questions 6-10, choose the correct word to complete the questions.**

**6 முதல் 10 வரையான கேள்விகளுக்குத் தரப்பட்ட சொற்களைக்கொண்டு வசனங்களுக்குப் பொருத்தமான கேள்விகளை உருவாக்கி எழுதுக.**

6. தாத்தா கடைக்குப் போனார். __________ கடைக்குப் போனார்?

(அ) யார் (ஆ) எப்போது

(இ) எவை (ஈ) எங்கே

7. வாணி வீட்டுக்குச் சென்றாள். வாணி __________ சென்றாள்?

(அ) யார் (ஆ) எப்போது

(இ) எங்கே (ஈ) எது

8. விமானம் வானத்தில் பறந்தது. __________ வானத்தில் பறந்தது?

(அ) எது (ஆ) எங்கே

(இ) எப்போது (ஈ) எவை

9. கண்ணன் நேற்றுப் புத்தகம் வாசித்தான். கண்ணன் __________ புத்தகம் வாசித்தான்?

(அ) எது (ஆ) எவை

(இ) எங்கே (ஈ) எப்போது

10. மீன்கள் தண்ணீரில் வாழும். __________ தண்ணீரில் வாழும்?

(அ) எங்கே (ஆ) எவை

(இ) எப்போது (ஈ) எது

**For questions 11-12 Choose the correct sentence.**

**11 முதல் 12 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான வசனத்தைத் தெரிவு செய்க.**

11. (அ) ஆடைகள் அணிவார்கள் கம்பளி காலத்தில் குளிர்

(ஆ) அணிவார்கள் காலத்தில் குளிர் கம்பளி ஆடைகள்

(இ) குளிர் காலத்தில் கம்பளி ஆடைகள் அணிவார்கள்

(ஈ) கம்பளி ஆடைகள் அணிவார்கள் குளிர் காலத்தில்

12. (அ) ஏழு வானவில்லில் உள்ளன நிறங்கள்

(ஆ) வானவில்லில் உள்ளன நிறங்கள் ஏழு

(இ) வானவில்லில் ஏழு நிறங்கள் உள்ளன

(ஈ) நிறங்கள் ஏழு உள்ளன வானவில்லில்

**For questions 13-14 choose the word that is opposite in meaning to the word underlined.**

**13 முதல் 14 வரையுள்ள வினாக்களில் அடிக்கோடிட்ட சொல்லுக்கு எதிர்ச் சொல்லைத் தெரிவு செய்க.**

13. முயல் வேகமாக ஓடும். ஆமை ________ செல்லும்.

(அ) மெதுவாகச் (ஆ) அழகாக

(இ) சத்தமாக (ஈ) அமைதியாக

14. பூனை சிறிய மிருகம். யானை ________ மிருகம்.

(அ) சாதுவான (ஆ) வீரமான

(இ) பெரிய (ஈ) கோபமான

**For questions 15-17 choose the right word to make the sentence in past tense to future tense.**

**15 முதல் 17 வரையுள்ள வினாக்களில் நேற்று நடந்ததாக (இறந்த காலத்தில்) கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களை, நாளை நடப்பதாக (எதிர் காலத்தில்) மற்றி எழுதப் பொருத்தமான வினைச் சொல்லைத் தெரிவு செய்க.**

15. வாணி நேற்றுப் பால் குடித்தாள். வாணி நாளை பால் ________

(அ) சாப்பிட்டாள் (ஆ) சாப்பிடுவாள்

(இ) குடிப்பாள் (ஈ) கடித்தாள்

16. நாங்கள் நேற்றுப் பந்து விளையாடினோம். நாங்கள் நாளை பந்து ________

(அ) விளையாடுகிறோம் (ஆ) விளையாடுவோம்

(இ) விளையாடுவாள் (ஈ) விளையாடுவார்கள்

17. நான் நேற்றுப் பள்ளிக்கூடம் போனேன். நான் நாளை பள்ளிக்கூடம் ________

(அ) போவோம் (ஆ) போவேன்

(இ) போனார்கள் (ஈ) போவான்

**For questions 18 - 20 choose the odd one out.**

**18 – 20 வரையுள்ள வினாக்களில் வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்க.**

18. (அ) பச்சை (ஆ) சிவப்பு

(இ) வானவில் (ஈ) நீலம்

19. (அ) புளிப்பு (ஆ) கசப்பு

(இ) இனிப்பு (ஈ) சிரிப்பு

20. (அ) மார்கழி (ஆ) புதன்

(இ) வெள்ளி (ஈ) ஞாயிறு

**Read and understand the given poem and choose the correct answer to questions 21 - 25.**

**கீழ்வரும் பாடலைப் படித்து 21 முதல் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவுசெய்க.**



**எங்கள் வீட்டுப் பூனை**

சின்னச் சின்னப் பூனை
சிறந்த நல்ல பூனை
என்னைப் பார்த்துத் துள்ளும்
எங்கள் வீட்டுப் பூனை
வட்டமான கண்கள்
வண்ணமான செவிகள்
கட்டையான கால்கள்
காட்டும் நல்ல பூனை
நாயைப் பாத்துச் சீறும்
நகத்தால் மரத்தைக் கீறும்
பாயப் பதுங்கி ஓடும்
பந்தை உருட்டி ஆடும்

21. பூனை என்னைப் பார்த்ததும் என்ன செய்யும்?

(அ) துள்ளும் (ஆ) பாயும் (இ) நடக்கும் (ஈ) ஓடும்

22. பூனையின் கண்கள் எப்படியான வடிவமாக இருக்கும்?

(அ) வட்டம் (ஆ) சதுரம் (இ) நீள்சதுரம் (ஈ) முக்கோணம்

23. எதைப் பார்த்தால் பூனை சீறும்?

(அ) யானை (ஆ) மான் (இ) நாய் (ஈ) பன்றி

24. பூனை நகத்தால் என்ன செய்யும்?

(அ) கீறும் (ஆ) தடவும் (இ) வருடும் (ஈ) பாயும்

25. பூனை எதை உருட்டி விளையாடும்?

(அ) மீனை (ஆ) நூலை (இ) வாலை (ஈ) பந்தை




**Look at the above picture and answer the questions from 26- 30.**

**மேலே உள்ள படத்தைப் பார்த்து 26 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்கு விடை அளிக்கவும்.**

26. இது ஒரு

(அ) பூங்கா (ஆ) மிருகக்காட்சி சாலை

(இ) நீர்வாழ் உயிரினக் காட்சி சாலை (ஈ) பாடசாலை

27. இந்தப் படத்திலே எத்தனை யானைகள் உள்ளன?

(அ) இரண்டு (ஆ) ஒன்று (இ) நான்கு (ஈ) மூன்று

28. மிக நீண்ட கழுத்தை உடைய மிருகம் எது?

(அ) சிங்கம் (ஆ) கரடி (இ) ஒட்டகச்சிவிங்கி (ஈ) யானை

29. மரம் விட்டு மரம் தாவும் மிருகம் எது?

(அ) வரிக்குதிரை (ஆ) கரடி (இ) குரங்கு (ஈ) சிங்கம்

30. இப்படத்தில் உள்ள பனியில் வாழும் பறவை எது?

(அ) கோழி (ஆ) புறா (இ) மயில் (ஈ) பென்குயின்

**For questions 31 - 35 choose the word that is closest in meaning to the word underlined.**

**31 முதல் 35 வரையுள்ள வினாக்களில் அடிக்கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க.**

31. நாங்கள் உறவினர் வீட்டுக்குச் சென்றோம்.
    (அ) பகைவர் (ஆ) அயலவர் (இ) சொந்தக்காரர் (ஈ) நண்பன்

32. மதுரையை பாண்டிய மன்னன் ஆட்சி செய்தான்.
    (அ) குடிமகன் (ஆ) காவலன் (இ) அரசன் (ஈ) மந்திரி

33. துரியோதனனின் நண்பன் கர்ணன்.
    (அ) தோழன் (ஆ) பகைவன் (இ) உறவினன் (ஈ) அயலவன்

34. பெண்கள் வளையல் அணிந்து சென்றனர்.
    (அ) கொலுசு (ஆ) மூக்குத்தி (இ) சங்கிலி (ஈ) காப்பு

35. உழவர்கள் கதிரவனுக்கு நன்றி செலுத்தினர்.
    (அ) சந்திரன் (ஆ) சூரியன் (இ) நிலா (ஈ) வானம்

**Choose the correct answer for questions 36 to 40.**

**36 முதல் 40 வரையிலான கேள்விகளுக்குச் சரியான பதில்களைத் தெரிவு செய்க.**

36. முக்கனிகள் எவை?
    (அ) அப்பிள், அன்னாசி, வாழை (ஆ) மா, பலா, வாழை
    (இ) வாழை, அன்னாசி, தோடை (ஈ) தோடை, மா, வாழை

37. ஆத்திசூடியை இயற்றியவர் யார்?
    (அ) பாரதியார் (ஆ) கம்பர் (இ) ஒளவையார் (ஈ) திருவள்ளுவர்

38. உங்கள் அப்பாவின் தம்பியை எப்படி அழைப்பீர்கள்?
    (அ) சித்தப்பா (ஆ) பெரியப்பா (இ) மாமா (ஈ) தாத்தா

39. பாப்பா பாடல்கள் பாடியவர் யார்?
    (அ) ஒளவையார் (ஆ) கம்பர் (இ) இளங்கோவடிகள் (ஈ) பாரதியார்

40. தந்தை தாய்________ .
    (அ) கவனி (ஆ) உதவு (இ) பேண் (ஈ) மதி

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.
Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

விடைத்தாள்
ANSWER SHEET
2024

ஆரம்பப் பிரிவு
**Basic Level**

சுட்டிலக்கம் :
Index Number :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அ | ஆ | இ | ஈ | 21. | அ | ஆ | இ | ஈ |
| 2. | அ | ஆ | இ | ஈ | 22. | அ | ஆ | இ | ஈ |
| 3. | அ | ஆ | இ | ஈ | 23. | அ | ஆ | இ | ஈ |
| 4. | அ | ஆ | இ | ஈ | 24. | அ | ஆ | இ | ஈ |
| 5. | அ | ஆ | இ | ஈ | 25. | அ | ஆ | இ | ஈ |
| 6. | அ | ஆ | இ | ஈ | 26. | அ | ஆ | இ | ஈ |
| 7. | அ | ஆ | இ | ஈ | 27. | அ | ஆ | இ | ஈ |
| 8. | அ | ஆ | இ | ஈ | 28. | அ | ஆ | இ | ஈ |
| 9. | அ | ஆ | இ | ஈ | 29. | அ | ஆ | இ | ஈ |
| 10. | அ | ஆ | இ | ஈ | 30. | அ | ஆ | இ | ஈ |
| 11. | அ | ஆ | இ | ஈ | 31. | அ | ஆ | இ | ஈ |
| 12. | அ | ஆ | இ | ஈ | 32. | அ | ஆ | இ | ஈ |
| 13. | அ | ஆ | இ | ஈ | 33. | அ | ஆ | இ | ஈ |
| 14. | அ | ஆ | இ | ஈ | 34. | அ | ஆ | இ | ஈ |
| 15. | அ | ஆ | இ | ஈ | 35. | அ | ஆ | இ | ஈ |
| 16. | அ | ஆ | இ | ஈ | 36. | அ | ஆ | இ | ஈ |
| 17. | அ | ஆ | இ | ஈ | 37. | அ | ஆ | இ | ஈ |
| 18. | அ | ஆ | இ | ஈ | 38. | அ | ஆ | இ | ஈ |
| 19. | அ | ஆ | இ | ஈ | 39. | அ | ஆ | இ | ஈ |
| 20. | அ | ஆ | இ | ஈ | 40. | அ | ஆ | இ | ஈ |